[1972 ஆகஸ்ட் 9

தமிழாசிரியர்களின் ஊதியம்

*4 வினா—**திரு. எம். முத்தையா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முதல்நிலைத் தமிழாசிரியர்களையும், இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களையும் அடிப்படை ஊதியத்தில் ஒரே சம நிலையாக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை. ஆனால் முதல்நிலைத் தமிழாசிரியர் தகுதி பெற்றுள்ளோர் அனைவருக்கும் முதல் நிலைப் பதவிகள் கிடைக்கும்படி செய்ய 2,000 புதிய பதவிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, முதல் நிலை, இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் என்று எந்த அடிப்படையில் பிரிக்கப்படுகிறார்கள் என்று அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி.-யிலே தேர்வு பெற்று அதற்குப் பிறகு, வித்துவான் அல்லது புலவர் தேர்வு பெற்று, ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் முதல் நிலைத் தகுதி ஆசிரியர்களாகக் கருதப்படுகிறார்கள்.

பொதுக்கல்வி அடிப்படையில், எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெறாமல், புலவர் தகுதி மட்டும் பெற்று, ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் இரண்டாம் நிலை ஆசிரியர்களாகக் கருதப்படுகிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த இரண்டாம் நிலைத் தமிழ் ஆசிரியர்கள், எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்றதற்குப் பின்னாலும் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாக வைக்கப்பட்டு, முதல் நிலைத் தமிழாசிரியர்களாக இன்னும் 200 பேருக்குக் கொடுக்கப்படாமல் இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறதே, அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இரண்டாம் நிலைத் தமிழ் ஆசிரியர்களாக இருப்பவர்கள் தனியாகப் பரீட்சை எழுதித் தங்களைத் தகுதி உள்ளவர்களாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் இந்தத் தேர்வு பெற்றவர்களுக்கு வாய்ப்பு அளிக்கிற ஒரு நோக்கின் அடிப்படையில்தான் விகிதாசாரங்கள் அளிக்கின்ற முறையில் மாறுதல் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. அந்த அடிப்படையில் தான் இந்த ஆண்டு இரண்டாயிரம் பேருக்குப் புதிய பதவிகள் அளிக்க ஒப்பளிப்பு அளிக்கப்பட்டிருக்கின்றது.